
நித்திலக்குவியல்


அக்டோபர்—நவம்பர்—1975

குவியல் 14] [முத்து 7—8



ஆசிரியர்:


புலவர் கோ. வில்வபதி



மாணவர் மன்றக் கட்டடம், சென்னை.

மாணவர் மன்றம்

சென்னை.1.



தமிழகத்தின்

மாணவச் செல்வங்கள்

ஆசிரியப் பெருமக்கள்

அறச் செல்வர்கள்

ஆதரவால்

அன்பால்

உருவாகியுள்ள

மன்றக் கட்டடம்

சிவமுத்து நிலையம்

நித்திலக்குவியல்



குவியல் 14	திருவள்ளுவர் ஆண்டு, 2005 ராட்சச, ஐப்பசி—கார்த்திகை அக்டோபர்—நவம்பர் 1975	முத்து 7 — 8

மன்றக் கட்டடத் திறப்பு விழா

மாணவர் மன்றம் தமிழகத்து மாணவச் செல்வங்களின் முன்னேற்றத்தையே குறிக்கோளாய்க் கொண்டு கடந்த 44 ஆண்டுகளாகப் பல வழிகளினும் பாடுபட்டு வருகிறது. வெள்ளிவிழாக் கண்ட இம்மன்றம் அண்மையில் பொன்விழாக் காணும் பருவத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

வெள்ளிவிழாவுக்குப் பின் இம்மன்றம் தமிழகத்து மாணவ மணிகளின் 25 காசுகள், 50 காசுகள் போன்ற சிறிய அன்பளிப்புக்களையும் மன்ற ஆண்டு வருவாயில் 6¼ சதவிகிதம் என்று நாங்கள் ஒதுக்கி வைத்த நிதியையும் கொண்டே தனக்கென இருபெரு நிலையங்களை உருவாக்கி உள்ளது. சென்ற ஆண்டு இலட்ச ரூபா மதிப்புடைய ஒரு கட்டடத்தை வாங்கி அங்கு எட்டாம் வகுப்பு வரையுள்ள ஒரு பள்ளியையும் நடத்தி வருகிறது.

இந்த ஆண்டு மன்ற அலுவலகமாக விளங்கும் கட்டடத்தில் மேலும் இரண்டு அடுக்குகளைக் கட்டிக் கண்ணைக் கவரும் வண்ண முகப்புடன் எழில்மிகு மாளிகையாக்கி யுள்ளோம். அக்கட்டடத் திறப்பு விழாவும், கட்டட முகப்பில் மன்றத் தந்தையார் தமிழ்நெறிக் காவலர் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் சிலை திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற இருக்கின்றன.

மன்ற வெள்ளி விழாவுக்குப் பிறகு நடைபெற இருக்கும் இப்பெரு விழாவைச் சீரும் சிறப்புமாக நடத்தவேண்டும் என்பது எங்கள் ஆவல். இவ்விழாக்களை யொட்டிச் சிறந்த கருத்தரங்கு, கவியரங்கு, படத் திறப்பு, பரிசளிப்பு போன்ற பற்பல நிகழ்ச்சிகளையும் நடத்த எண்ணியுள்ளோம்.

விழா நினைவாக மன்றத்தின் தொண்டுகளை விளக்கும் கவின்மிகு மலர் ஒன்றும் வெளிவரும்.

இப் பெருவிழா எதிர்காலத்தில் மன்றம் மேலும் பற்பல சீரிய தொண்டுகளை மேற்கொண்டு தமிழ் வளரவும், தமிழ் இளைஞர்கள் முன்னேறவும் உழைப்பதற்கு எழுச்சியூட்டும் இன்ப விழாவாக அமையவேண்டும் என்பது எங்கள் ஆவல்.

மன்றம் தமிழர் சொத்து, தமிழ்நாட்டின் தலைநகரில் தமிழ் வளர்க்க—தமிழர் உழைப்பால் நிறுவப்பட்ட தமிழ்க் கோயில்! பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார், பேராசிரியர் மணி திருநாவுக்கரசர், பேராசிரியர் மயிலை சிவமுத்து ஆகியவர்கள் கண்ட கனவின் நனவுச் சின்னம்! தமிழாசிரியர்கள் உரிமை யுடன் அணுகும் உயரிய நிலையம்! தமிழுணர்வையும், தமிழ் இனப் பற்றையும் பரப்பும் கலங்கரை விளக்கம்! ஆகவே மன்ற வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் இப்பெருவிழா சிறக்க உங்கள் அன்பும் ஆதரவும் தேவை.

மன்றத்தின் நன்முயற்சி சிறக்கத் தமிழ்ப் பெருங்குடி மக்க ளும் தமிழாசிரிய நண்பர்களும் ஒல்லும் வகையால் உதவ இயலும். அறவுணர்வுடைய பெருமனச் செல்வர்கள் தங்க ளால் இயன்ற நிதி உதவி செய்யலாம். வணிக நிலையங்களை யும், தொழில் நிறுவனங்களையும் நடத்தும் நல்லவர்கள் மலருக்கு விளம்பரங்கள் உதவும் வகையில் எங்கள் முயற்சிக் குக் கைகொடுக்கலாம். தமிழாசிரியப் பெருமக்களும், கல்லூரி முதல்வர்களும், தலைமை ஆசிரியர்களும் மன்றத் தேர்வுகளில் மாணவச் செல்வங்களை மிகுதியாகக் கலந்துகொள்ளச் செய் வதன் வாயிலாக ஆண்டுதோறும் ஒதுக்கும் நிதியை உயர்த்த உறுதுணை புரியலாம். மற்றும் தங்கள் செல்வாக்கைப் பயன் படுத்தி ஒவ்வொருவரும் ஒரு விளம்பரம் வாங்கி யனுப்பினாலும் போதும். சிறுதுளி பெருவெள்ளமாய் மன்றத்திற்குப் பேருதவி புரியும்.

மன்றம் உங்கள் குழந்தை! மன்ற வளர்ச்சி உங்கள் வளர்ச்சி! மன்றத்தின் பெருமை உங்கள் பெருமை! மன்றம் சிறக்க உங்கள் அன்பும் ஆதரவும் கிடைக்கும் என்று உறுதி யாய் நம்புகிறோம்.

மன்றத்தின் தோற்றமும் தொண்டும்

தமிழையும் தமிழ் இன உணர்வையும் வளர்க்கவும், குறிப்பாகத் தமிழக இளைஞர்களிடையே அவ்வுணர்வை ஊட்டி வளர்க்கவும் மாணவர் மன்றம் 1931-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சிறிய அறையில் அகல் விளக்கில் பணியாற்றிய மன்றம் தமிழ்நெறிக் காவலர் பேராசிரியர் மயிலை சிவமுத்து, வீரத் தமிழன்னை டாக்டர் தருமாம்பாள் அம்மையார் ஆகியவர்தம் உழைப்பால்—வழிகாட்டுதலால் வளர் பிறையென வளர்ந்து இன்று ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன்கொள்ளும் வகையில் பெரியதோர் அமைப்பாகத் திகழ்கிறது.

1957-ஆம் ஆண்டு நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், அப்போதைய கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் போன்ற பெருந்தலைவர்கள் பங்கேற்க—பல்லாயிரக் கணக்கில் தமிழ்ப் பெருமக்கள் திரண்டு வாழ்த்த மன்றம் வெள்ளி விழாவைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடியது. வெள்ளி விழாவுக்குப் பிறகு மன்றம் பல துறைகளிலும் பணியாற்றி வேகமாக வளர்ந்து இன்று இரண்டு இலட்சம் ரூபா மதிப்புடைய இரண்டு நிலையங்களைத் தனக்கெனப் பெற்றுள்ளது.

சில ஆண்டுகளில் பொன்விழாக் காண இருக்கும் மன்றம் புதிய கட்டடத் திறப்பு விழாவையும், மன்றத் தந்தை பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் உருவச்சிலை திறப்பு விழாவையும் அண்மை

யில் நிகழ்த்த இருக்கிறது. அதன் சார்பாக மன்றத்தின் தொண்டுகள் சிலவற்றைத் தங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறோம்.

1. மன்றம் பள்ளிக்குச் செல்லாத பாப்பாக்கள் முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மழலைச் செல்வங்களின் ஆற்றலைத் தூண்ட ஆண்டுதோறும் பாடி நடித்தல், கதை சொல்லல், பேச்சு, மாறுவேடம் ஆகிய பல துறைகளில் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கி ஊக்கி வருகிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் இப்போட்டிகளில் பங்குகொண்டு பயன்பெறுகின்றனர்.

2. நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கட்குக் கட்டுரை, கதை, கவிதை, கையெழுத்து, ஓவியம் ஆகிய துறைகளில் போட்டிகள் நடத்திப் பரிசுகளும், நன்மதிப்பிதழ்களும் வழங்கி வருகிறது. ஆண்டுதோறும் தமிழ்நாடு முழுவதிலுமாகப் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்து நன்மை பெறுகின்றனர்.

3. பேராசிரியர் மயிலை சிவமுத்து சுழற்கேடயப் போட்டியாக உலகப் பொதுமறையாகிய திருக்குறள், திருவருட்பா ஆகிய நூல்களில் நடுநிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்கட்குப் போட்டிகள் நடத்திப் பரிசுகளும், நன்மதிப்பிதழ்களும் வழங்கி வருகிறது. போட்டிக்குரிய திருக்குறளும், அருட்பாவும் அச்சிட்ட சுவடிகளை ஆயிரக்கணக்கில் இலவசமாக வழங்கி மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி வருகிறது. ஒவ்வோராண்டும் இப்போட்டிகளிலும் ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர் கலந்து பயன்பெறுகின்றனர்.

4. வீரத் தமிழன்னை டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவாகச் சுழற்கேடயப் பேச்சுப் போட்டியை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இப்போட்டியில் உயர்பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தம் பேச்சுத் திறமையை வளர்த்துக் கொள்கின்றனர்.

5. மன்றத்தின் தொண்டுகளில் சிகரமாக விளங்குவது மன்றத் தமிழ்த் தேர்வு ஆகும். எட்டாம் வகுப்பு, பள்ளியிறுதி வகுப்பு, புகுமுக வகுப்பு, பட்ட வகுப்பு ஆகியவற்றிற்கு அரசாங்க, பல்கலைக் கழகத் தேர்வுகட்கு முன்பே மாதிரித் தேர்வுகள் நடத்தி மாணவர்கட்கு நல்வழி காட்டி வருகிறது மன்றம். மன்றம் நடத்தும் இத் தமிழ்த் தேர்வுகளில் எந்தவித மான கட்டாயமும் இல்லாமல் ஆண்டுதோறும் இரண்டு இலட்சம் மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்று வருகின்றனர். அவர்கட்கு ஏராளமான பரிசுகளையும், நன்மதிப்பிதழ்களையும் வழங்கி அவர்களை ஊக்கி வருகிறது மன்றம். இத்துறையில் மன்றம் செய்யும் சேவை பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றால் வரவேற்கப்படுவதோடு அறிஞர் பெருமக்களால் மதித்துப் பாராட்டப்பட்டு வருகிறது.

6. மன்றச் சார்பில் ஆரம்பப் பள்ளி ஒன்றும், நடுநிலைப் பள்ளி ஒன்றும் நடைபெறுகின்றன. ஏறக்குறைய ஆயிரம் குழந்தைகள் இப் பள்ளிகளில் பயில்கின்றனர். முப்பது ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

7. "நித்திலக் குவியல்" என்னும் திங்களிதழ் ஒன்று மன்றச் சார்பில் வெளிவருகிறது. மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் அவ்விதழ் பெருந் தொண்டாற்றி வருகிறது.

8. கடல் கடந்து மலேசியாவிலும், மொரிஷியஸ் தீவிலும் வாழும் தமிழ் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்கட்குத் தமிழ்ப் பாடத் திட்டம் வகுத்துத் தேர்வுகள் நடத்தி, வெற்றி பெற்றவர்கட்குத் 'தமிழ்மணி' என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டுகிறது.

9. மன்றத்திற்கெனச் சொந்த அச்சகம் நிறுவித் தமிழ் உணர்வைப் பரப்பும் பல்வகை வெளியீடுகளை வெளியிட்டு வருகிறது. பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் எழுதிய திருக்குறள் இனிய எளிய உரை

என்ற நூல் (பத்து ரூபா மதிப்புடையது) 30,000 பிரதிகள் அச்சிட்டு மாணவர்கட்குப் பரிசுகளாக வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

10. மற்றும் பல துறைகளிலும் தொண்டாற்ற மன்றம் முனைப்புடன் செயல்படுகிறது. பொது மக்கள் உள்ளத்தில் தமிழ் உணர்வையும், இனவுணர்வையும் ஊட்டி வளர்க்க இலக்கியக் கூட்டங்கள், வகுப்புக்கள் நடத்தல், பொது மக்கட்கும், மாணவர்கட்கும் பயன்படக்கூடிய நூல் நிலையம், வாசகசாலை நடத்துதல், ஆசிரியர் கூட்டுறவு நூல் வெளியீட்டுக் கழகம் நடத்துதல், தமிழகத்தில் மட்டுமல்லாமல் பாரதம் முழுவதிலும் வாழும் தமிழரல்லாதவரும் தமிழின் பெருமை உணர்ந்து பயன்கொள்ளும் வகையில் தொண்டாற்றுதல், பிறமொழிகளில் உள்ள கலைச் செல்வங்களைத் தமிழில் சேர்க்க அறிஞர் பெருமக்களைக் கொண்டு முயன்று சிறந்த நூல்களை வெளியிடுதல் முதலிய பயன்மிகு வழிகளில் தொண்டாற்ற மன்றம் முயன்று வருகிறது. தமிழ்ப் பெருமக்கள், அறிஞர்கள், அரசினர் ஆகியோரின் உதவியை எதிர்பார்த்து மன்றம் தன் கடமையைச் செய்யக் காத்திருக்கிறது. மன்றத்திற்கு மேலும் எழுச்சி யூட்ட இவ்விழா பயன்பட வேண்டும் என்று விரும்புகிறோம்.

அன்புள்ள,

கோ. வில்வபதி
தலைவர்

தணிகை உலகநாதன்
மி. ச. நடேசன்
செயலாளர்கள்

வி. ஆர். சீநிவாசன்
பொருளாளர்

ப. கி. பொன்னுசாமி,
மா. இரா. வஞ்சிக்கோவன்
இணைச்செயலாளர்கள்

முத்தொள்ளாயிரம்

இலக்கியச் சோலை—இரண்டாம் பேச்சு

பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ்
தமிழ்த்துறைத் தலைவர், தூய சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

இலக்கிய வாசகங்கள் இலங்கி மிளிர்கின்ற இன்பப் பேழையாகவும், வாழ்க்கையின் சீர்த்திமிகு சம்பவங்களின் நிலைபெற்ற சித்திரச் சாலையாகவும், கலைமலி கற்பனைகளையும் கவினுறு சிந்தனைகளையும் விளைத்து வளர்க்கின்ற சோலையாகவும் விளங்குகின்ற முத்தொள்ளாயிரத்தில் மேலும் சில காட்சிகளைக் கண்டு மகிழ்வோம்.

இதோ ஒரு போர்க்களக் காட்சி. பாண்டிய மன்னன் தன் கையில் வேல் ஏந்தியவனாகப் போர்க்களத்தினுள்ளே வீர விளையாட்டயர்கின்றான். அவனும் அவனைச் சார்ந்தவர்களும் தம்மை எதிர்த்த பகையரசர்களைச் சினத்துடன் தாக்கிச் சின்ன பின்னப் படுத்தும் முயற்சியில் தலைப்படுகின்றனர். ஆயினும் தென்னவன் களத்தினுள்ளே காண்பது என்ன? அவனுடைய மாற்றார் மடித்த வாயினராகக் கிடக்கின்றனர். அவர்தம் கையில் பிடித்த வேல் எதிர்ப்படுபவர் கண்ணைக் குத்துவது போல நீட்டப்பெற்றிருக்கிறது. அன்னவர் யானையை அமளியாகக் கொண்டவர்போல அதன்மீது மல்லாந்திருக்கின்றனர். அவர்கள் உண்மையாகவே, இறந்தும் இறவாத மாண்புடையவர்கள். அவர்கள் இன்றிருந்து நாளையில்லா மனிதரல்லர். என்றைக்கும் வாழ்கின்ற ஈடு இணையற்ற வயவர்கள். எனவே அவர்களை 'இறந்த' என்னாது 'கண்படுத்த' என்று கருத்துடன் பேசுகிறது முத்தொள்ளாயிரம். "தாம் துஞ்சியும் தம் மறம் துஞ்சாத இம்மன்னர்களைப் போலக் களத்தில் மடிந்து வீறுடன் கிடப்பதல்லவா மாற்றாரை வெல்லுதலைக் காட்டிலும் விஞ்சிய சிறப்புடையது?" இவ்வாறு தன் உள்ளத்தினுள்ளே உரைத்துக் கொண்டவனாக, வென்ற தென்னவன், வெற்றியால் விம்மிதம் அடையவேண்டிய மன்னவன், தோற்றான்போல் நிற்கின்றானும். உச்சியில் கொடி கட்டிய வேற்படை தாங்கிய பாண்டியனை இவ்வாறு விளம்ப வைத்த காட்சி உள்ளபடியே வியத்தகு காட்சிதான்.

கொடித்தலைத்தார்த் தென்னவன் தோற்றான் போல் நின்றான்
மடித்தவாய், சுட்டிய கையால்—பிடித்தவேல்
கண்நேரா ஒச்சிக் களிறுஅணையாக் கண்படுத்த
மண்நேரா மன்னரைக் கண்டு.

பகைப்புலத்து வீழ்ந்து கிடப்பவராகிய தம் பகையரசர் அவரைச் சார்ந்தவர் இத்துணை வீரம் மிக்கவராய்த் தடித்த

பற்களும் மடித்த உதடுகளும் நெறித்த புருவமும் உடையவ ராய்க், கையில் பிடித்த வேலை எதிரிகளின் கண்ணுக்கு எதிரே ஏந்தியவராய், யானைமீது சாய்ந்து கொண்டு, மண் கொடுக்க மறுப்பவராய் இருக்கின்றார்களே! இவரன்றோ தறுகண்மைத் தகுதிமிக்க பெருவீரர். இவரை வென்றது ஒரு வெற்றியாகுமா? எனவேதான் எண்ணி எண்ணிப் பார்க்கின்றான் பாண்டியன். மடித்தவாய், பிடித்தவேல், களிற்றின்மீது சாய்ந்த வண்ணம், மண்ணைக் கொடுக்க இசையாத மறத்தன்மை ஆகிய இவற் றைப் பார்த்துப் பார்த்து கொடித்தலைத்தார் தென்னவனோ அவ னுக்கு முன்னவனோ பின்னவனோ தோற்றான்போல் நிற்காமல் பொறி கலங்கித் தம்பித்து நிற்காமல் வேறு என்ன செய்ய இயலும்?

* * *

பாண்டிய வழுதியிடத்துக் காதல் கொண்ட ஒரு நங்கை நெஞ்சொடு புலம்புகிறாள். அந்தப் பெண்ணின் குமுறல் கனிவு மிக்க கவிதையாக வாழும் வரம்பெற்றிருக்கின்றது.

தாவிப் பாயும், குதிரை வாகனத்தானும், கூரிய வேற்படை யோனுமாகிய பாண்டியன் பவனி வருவதைப் பார்க்கிறாள் ஒரு பெண்ணின் நல்லாள். வண்டுகள் மொய்ப்பதனால் விரியும் நறுமணமிக்க மலர்களால் கட்டப்பெற்ற பல்வேறு மாலைகளை அம்மன்னன் அணிந்திருப்பதை அவள் நோக்குகின்றாள். அந்த மாலைகளுடன் குவளை மலர் மாலை ஒன்றும் இடம் பெற் றிருக்கின்றது. இந்த மாலை அப்பெண்ணின் ஏக்கத்தை இயக்கி எண்ண அலைகளை உருவாக்குகின்றது. அவள் நினைவுப் படர்ச் சியைக் கேட்போம்.

"கயத்தில் உள்ள குவளையும்கூடப் பாண்டியனின் படர்ந்த மார்பினை வயப்படுத்திக் கொண்டதே! அப்படி உயர்ந்த பண்பு அதனிடத்தில் என்னதான் இருக்கின்றதோ? அந்தப் பண்பை அது எப்படித்தான் பெற்றதோ? புரியாத புதிராக இருக்கின்றதே............சரிதான் இப்பொழுது புலப்படுகின்றது. கொஞ்சம் அழுத்தமாக ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் நுட்பம் விளங்குகின்றது. குவளைப்பூ கார்நறு நீலம் என்று பெயர் பெறுகின்றது. அஃதாவது கருமையும் நறுமணமும் ஒருங்கியைந்த பூ. கார்காலத்தில் பூத்தற்குரிய பூ. கருதிப் பார்த் தால் இந்தப் பூவிற்கும் ஒரு சிறப்பு இருக்கின்றதே! அதையும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். முனிவர்கள் கோடைக் காலத்தில் பஞ்சாக்கினி நடுவில் நின்று தவஞ்செய்வார்கள். மாரிக்காலத்தில் குளிர்ச்சி மிக்க நீர் நிலையின் நடுவில் நின்று தவஞ் செய்வார்கள். இந்தக் குவளை மலரும், முனிவர் பெரு

மக்களைப் பின்பற்றிக் கயத்திலே ஒற்றைக்கால் ஊன்றி நாள் தோறும் நின்று தவஞ் செய்கிறதல்லவா? இதனால் அன்றோ இது பாண்டியனின் மாலையாகும் பெருமை பெற்றுவிட்டது. என்னே தவத்தின் மகிமை. எனக்கும் இத்தகைய தவப்பேறு வாய்த்தல் ஆகாதோ?" அவள் தன் சிந்தனைச் சுடரே செய்யுள் நெறிப்படுத்தப் பெற்றுள்ளது. அபலையின் அவலக் குரல் அற்புதக் கவிதையாகின்றது.

காா்நறும் நீலம் கடிக்கயத்து வைகலும்
நீர்நிலை நின்ற தவங்கொலோ?—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியால்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.

குவளையின் தவம் பற்றிச் சிந்தித்த இப் பெண்ணுவது தன் நெஞ்சொடு புலம்பிக் கொண்டாள். இவளைப் போன்றே பாண்டியனிடத்து மையல் கொண்டாள் மற்ரொரு மங்கை. அவள் தன் ஆர்வ ஆசையைத் தன்னுள்ளே அடக்கிக் கொள் ளக் கூடவில்லை. அதனைத் தோழியினிடத்து வெளிப்படப் பகர்கின்றுள். அவருடைய தயவை நாடி அவனை அவனிடம் தூது போகவும் தூண்டுகின்றுள். தோழியிடம் அத்தலைவி நிகழ்த்துகின்ற உரையாடல் அவளுடைய நாணத்திற்கும் வேட்கைக்கும் இடையே நிகழ்கின்ற ஊஞ்சல் ஆட்டமாகவே தோற்றம் தருகின்றது. நிகழ்ந்தது என்ன? சிறிய யானையல்ல, பெரிய யானை. அசைந்தாடி வருகின்ற யானையல்ல, விரைந் தோடி வருகின்ற யானை. குளிர்ந்த பார்வையுடைய யானையல்ல, அச்சம் உண்டாக விழிக்கின்ற யானை. இத்தகைய யானைமீது வீற்றிருந்து வீதி வழியாக வருகின்றுன் பாண்டிய வேந்தன். அவன் தண்ணளி மிக்க தமிழர் பெருமான். இனிமை தழுவிய எழிலார் ஏந்தல்.

யானைக்கு அஞ்சிய தலைவி மன்னனுக்கு அஞ்சவில்லை. அவன்தானும் அச்சம் தருபவன் அல்லன்; அபயம் தருபவன். அபயம் தருபவன் ஆயினும் எடுத்த எடுப்பிலே தன் உள்ளக் கிடக்கையை யெல்லாம் அவனிடம் உரைக்க ஒருப்படு வாளா தலைவி? தூதனுப்புவதாயினும் அதிலும் ஒரு முறை வேண்டுமே!

இது சொல்லத் தக்கது; இது சொல்லத் தகாதது என்ற நியதி இருக்கின்றதல்லவா? எனவே இதைச் சொல்லாதே, இதைச் சொல்லாதே என்று நிரல்படச் சிலவற்றை நியமித் துரைத்து, இதை மட்டுஞ் சொல்; இதுவே சாலும் என்று வரை யறுத்து விளம்புகிறுள் தலைவி தன்னருமைத் தோழியிடத்து.

"தோழி! அவரிடத்திலே என் ஆர்வ நிலையைச் சொல்லாதே! என் பேரைச் சொல்லாதே! என் ஊரைச் சொல்லாதே! நம் அன்னை இன்ன தன்மையள் என்பதையும் சொல்லாதே! இவற்றையெல்லாம் சொன்னால் அவர் என்னைப்பற்றியும், நம் சுற்றத்தைப் பற்றியும் என்ன நினைப்பாரோ? ஏது கருதுவாரோ? உண்மைதான் அண்மையில்..............நான் அவனை நோக்கினேன்; அவன் என்னை நோக்கினான். இதற்குள்ளே இந்தக் களவு நிலை வெளிப்பட வேண்டுமா? அவளுந்தான் இத்துணை விரைவில் அதனை வெளிப்படுத்த வேண்டுமா? எனச் சீற்றம் கொள்வாரோ? இவள் வேகம் மிக்கவள்; விவேகம் இல்லாதவள். இத்தகையவள் எனக்கு வேண்டவே வேண்டாம் என்று என்னை விலக்கி விடுவாரோ? எனக்கு அச்சமாக இருக்கிறது. என் காதலன்பை வெளிப்படுத்தாமல் இருப்பதும் சரியல்லவே? ஒன்று சரியெனப் புலப்படுகிறது பொதுவில் இதனைச் சொல்லி வை. என்னை நீ தெரிந்து கொள்ளாதவள் போலவும், அரசன் என்னை விரும்பி யிருப்பதை நீ அறிந்து கொள்ளாதவள் போலவும்—ஒருத்தி தூங்காமல் ஏங்கிக் கொண்டிருக்கிறாள் என்று முன்னிலைப் பொது மொழியாகச் சொல். இதைக் கேட்டு அவருக்கு என் நினைவு வந்தாலும் வரக்கூடும். நினைவு வந்தால் போதுமே. உடனே இங்கே வருவார். என் இதய வேட்கை தீரும்!"

இத்தனைச் செய்திகளையும் அடக்கியுள்ள முத்தொள்ளாயிர வித்தகச் செய்யுளைக் கேட்போம்.

> என்னை உரையல் என்பேருரையல் ஊருரையல்
> அன்னை இன்னள் எனவுரையல்—பின்னையும்
> தண்படா யானைத் தமிழ்நர் பெருமாற்கென்
> கண்படா வாறே உரை.

பாண்டிய மன்னனிடத்துத் தன் உளத்தைப் பறிகொடுத்த இளம் பெண் ஒருத்தி வீட்டை விட்டு வெளியே வந்து மன்னவனின் திருக்கோலக் காட்சியைக் கண்ணாரக் காணவேண்டும் என்று துடிக்கின்றாள். அதற்குள்ளே அன்னையின் தடையுத்தரவு. வீட்டிற்குள்ளே போ போ என்று விரட்டிக்கொண்டு சென்று இற்செறித்து வைக்கிறாள். இச்செயல் அப்பெண்ணுக்குப் பெரும் வருத்தத்தைத் தருகின்றது. அவள் தன் வேதனையை யாரிடம் சொல்லி ஆற்றுவாள்? தோழியிடம் தெரிவித்துத்தானே தேற்றிக் கொள்ளவேண்டும்? ஆகவே தோழியைத் தனித்துக் கண்டு தன் ஆற்றாமையைப் புலப்படுத்திக் கொள்கின்றாள்.

“வளையல் அணியப் பெற்ற நீண்ட தோள்களையும் வாள் போன்ற ஒளி படைத்த கண்களையும் உடைய என்னருமைத் தோழி! நம் மதிப்பிற்குரிய அன்னைக்கு இளந்தலைமுறையின ரைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இல்லையோ? அவள் இளமைப் பருவம் உடையவளாக இருந்து படிப்படியாக மூப்படைய வில்லையோ? என் பருவ உணர்ச்சிகளை உணராமல் இருக்கின் ருளே. இப்படி விரட்டு விரட்டு என்று விரட்டுகின்ருளே. அரும்பின் கட்டவிழ்ந்த மலர் மாலையை அணிந்தவனும், மாற் ருரை அழித்து அவர்தம் நாட்டைக் கைக்கொண்ட படையை யுடையவனும், வீரம் ஒளிர்கின்ற வேலினைக் கொண்டவனு மாகிய பாண்டியனைக் கண்ணுல் பாராதே என்று இவ்வளவு கர்ண கடூரமாகக் கட்டளை இடுகின்ருளே. நான் மறுபடியும் தான் கேட்கிறேன். இவள் இளமைப் பருவம் உடையவ ளாக இருந்ததே இல்லையா? மூப்புடையவளாகவே பிறந்து விட்டாளா?

வளையவாய் நீண்டதோள் வாட்கணுய் அன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோ?—தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேல் மாறனை
கண்கொண்டு நோக்கலென் பாள்.

இன்னுஞ் சில முறையீடுகள். மாறனிடத்துத் தம் மனத் தைப் பறிகொடுத்த மகளிர் தத்தம் தோழியிடத்து உரைப்பன; நல்ல வழக்கீடுகள்; நவில்தொறும் நயஞ்சுரக்கும் இலக்கிய வழக்கீடுகள்.

ஒரு தலைவி சொல்கிருள் :

தோழி குற்றமில்லாத எம்முடைய வீதியில் தென்னவன் உலா வந்தான். நான் வெருென்றுஞ் செய்திலேன்; தொழு தேன். அத்தருணத்திலேயே அவன் நெஞ்சம், நாணம், நலம், அழகு அத்தனையும் கவர்ந்து கொண்டான். அதனுல் இரவெல் லாம் எனக்கு உறக்கமே இல்லை. அமைதியாவது உண்டா? அதுவும் இல்லை. கருங்கடல் ஓயாது ஒலித்துக் கொண்டிருந் தது. அதன் அலைகள் என் அமைதிக்கு உலை வைக்கவே தோன்றியன போலும். கடலுக்கும் அதனை அடுத்துள்ள கொற்கைக்கும் அரசன் அவன் தானே. இனி, எவரிடத்தில் என் குறையை எடுத்தியம்பித் தீர்ப்பேன்? வேலியே பயிரை மேய்ந்தால் என்னுவது? இவ்வாறு இருக்கின்றதே என் நிலைமை. என் செய்யவல்லேன்?

வழுவிலெம் வீதியுள் மாறன் வருங்கால்
தொழுதேனைத் தோள்நலமும் கொண்டான்—இமிழ்திரைக்
கார்க்கடல் கொற்கையார் காவலனும் தானேயால்
யார்க்கிடுகோ பூசல் இனி?

இன்னொருத்தி இயம்புகின்றாள்:

செங்கோல் மன்னவனாகிய தென்னவனுக்கு உயிர்க்காவ னும் உரியதல்லவா? அவன் காவலுக்குள்ளான என் உயிரும் ஓர் உயிராம் என்பதில் தடையில்லை. அவ்வாறாயின் ஒரு வரிசையில் உண்பவர்க்குப் பால் ஊற்றிச் செழிக்க வைப்பது; மற்றொரு வரிசையில் உண்பவருக்கு நீரை மட்டும் ஊற்றிப் பாலை ஊற்றாமல் இருப்பது என்னுமாறு எல்லா உயிர்களுக்கும் இனிமை யுடையவனாக இருந்து எனக்கு மட்டும் துன்பம் விளை விக்கிறானே மன்னன். அது ஏன்? அது அப்பாண்டியனுக்கு முறையா? நீதியா? தருமந்தானா?

மன்னுயிர் காவல் தனதான அவ்வுயிருள்
என்னுயிரும் எண்ணப் படுமாயின்—என்னுயிர்க்கே
சீரொழுகு செங்கோல் செழியற்கே தக்கதோ?
நீரொழுகப் பாலொழுகா வாறு.

மற்றொருத்தி நவில்கின்றாள்:

தோழி நானோ மிக எளியவள். அதுவுமின்றி இரங்கத்தக்க பெண் குலத்தவள். என் உள்ளம் கவர்ந்த கள்வனோ வெண் கொற்றக் குடையினனாகிய வேந்தன். மன்னர் மன்னன். சிற்றரசனாக இருந்தாலும் தலைமைப் பேரரசனிடம் முறையிட லாம். அதற்கும் வழியில்லை. வேற்று நாட்டு அரசரிடம் சென்று தெரிவிக்கலாம் என்றால் வானகத்திற்கு எதிராகப் பொருந்திய வையகமெல்லாம், அவனுடைய ஆட்சிக்கு உட் பட்டதாக இருக்கின்றது. ஈரம் உள்ள மாலையை அணிந்த மாறன் தானாக இரங்கி அருள் செய்தால் பயன் உண்டு. அவன் அருள் செய்யாவிடில் உன்னைக் காதலித்த மங்கைக்கு அருளாமல் இருப்பது அழகல்ல என்று கூறுவார் யார்? ஒரு வரும் இல்லையே என் செய்ய வல்லேன்?

தானேல் தனிக்குடைக் காவலனார் காப்பதுவும்
வானேற்ற வையக மெல்லாமால்—யானோ
எளியனோர் பெண்பாலேன் ஈர்ந்தண்டார் மாறன்
அளியானேல் அற்றென்பார் ஆர்?

(நன்றி: திருச்சி வானொலி நிலையம்)

அன்புச் சுடரே, சென்றதும் ஏன்?

[மயிலை முத்தெழிலன்]

அன்புச் சுடரே, அருளொளியே;
அயரா துழைப்பில் கடலலையே;
என்றும் எளிய வாழ்க்கையினை
ஏற்ற ஏழை பங்காள,
அன்னை நாட்டின் நிலையுயர
அல்லும் பகலும் பணியாற்றி,
இன்றும் பணிதாம் முடிந்ததென
இறப்பூர் நாடிச் சென்றனையோ!

எத்துணை இடர்க ளூற்றுலும்;
இதயங் கலங்கா மன்னவனே,
இத்தரை ஏழைச் சிறுவர்கள்
இனிதாய்க் கற்கச் செய்தவனே,
பத்தரை மாற்றுத் தங்கம்போல்
பண்பில் உயர்ந்த பெருந்தலைவ,
நித்தம் உன்றனை நினைந்தேங்க
நீள்துயில் கொண்டது ஏனய்யா?

அண்ணல் காந்தி நெறிநின்று
அமைதி யுடனே பணியாற்றி,
எண்ணம் இனிக்கத் தாய்நாட்டின்
ஏற்றம் காண வழிதந்து,
தொண்டர் கலங்கித் துடித்திடவும்,
தோழர் கண்ணீர் வடித்திடவும்,
கண்கள் மூடிய தேனய்யா,
கர்ம வீர, கழறிடுவீர்!

கறுப்புக் காந்தி என்றுலகம்
காம ராசரே, உமைப்புகழும்!
விருப்பு, வெறுப்பு இல்லாமல்
விழுமிய தொண்டை ஆற்றிட்டாய்!
உருவில் இமயம் என்றுலகம்
உவந்தே போற்றும் உத்தமரே,
அருமை அன்னை நினைவுற்று
அவனி விடுத்துச் சென்றீரோ?

நலமுறச் சோச லிசத்திட்டம்;
நாட்டிற் களித்த நாயகனே,
உலகம் போற்றும் நிலையுற்றும்
உழைப்பை மறவா உயர்வான,

அலகில் பணிகள் ஆற்றிட்ட
அயர்வைப் போக்கி ஒய்வுறவோ,
இலங்கும் புகழை விடுத்திட்டே,
இயற்கை யுடனே கலந்திட்டீர்!

எம்மைப் போன்ற இளைஞர்க்கு
எழுச்சி அமுதை ஊட்டிட்டாய்!
இம்மா நிலத்தைக் காத்தற்கு
இல்லற வாழ்வைத் துறந்திட்டாய்!
உம்மைப் போன்றே உழைத்தற்கு
ஒருவரும் இல்லை என்றறிந்தும்
இம்மை வாழ்வில் வெறுப்புற்றே,
இறைமை நிலையைப் பெற்றிட்டீர்!

அண்ணல் காந்தி யுடனிருந்து
அகமே மகிழச் சென்றீரோ?
அண்ணா, பெரியார், இராஜாஜி
அன்பை எண்ணிப் பறந்தீரோ!
மண்ணும், விண்ணும், நீர்வடிக்க,
மாண்புக் குன்றே, சென்றதுமேன்?
திண்ணம் உன்றன் நினைவனைத்தும்
திகழுற மக்கள் ஆற்றிடுவார்!

மகனைப் பற்றிக் கவலை இல்லை

[புலவர் அ. அ. ஞானசுந்தரத்தரசு, எம்.ஏ.]

தமிழாசிரியர், அரசுயர் பள்ளி, மாச்சனூர்

இலால் பகதூர் இந்தியாவின் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றபோது அவருடைய தாய், "என் மகனுக்குப் பெரிய பதவி கிடைத்திருக்கிறதே என்பதற்காகப் பெருமை கொள்ளவில்லை; நாட்டிற்குத் தொண்டாற்றப் பெரிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதற்கே மகிழ்கிறேன்" என்று கூறினார்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்பார் வள்ளுவர். தன் மகனைச் சான்றோனாகக் காண்பதிலேயே தாய்மை முழுமை பெறுகிறது என்பது வள்ளுவத்தின் உட்கருத்து.

இவ்வள்ளுவத்தின் கருத்தை ஏந்தி நிற்கும் புறப்பாடல் ஒன்று தாய்மையின் தகைமையைச் சொல்லால் சொல்லிக் காட்டுகிறது.

தாயொருத்தி வயதில் மூப்புடையாள். அவள் இருக்கும் வீடு சின்னஞ்சிறிய வீடு. அங்கே ஒரு பெண் வந்தாள். அவள் குழந்தைப் பருவத்திலிருந்தே அந்த வீட்டிற்கு வந்து செல்பவள். ஆனால் இப்போது.........நாணம் தலைக்கேறிய நங்கையாகி விட்டாள். பருவம் அவள் வடிவாகப் புறப்பட்டிருந்தது.

வந்த நங்கை தனியே நிற்கவில்லை. தூணைப் பிடித்துக் கொண்டு நின்றாள். நாணத்தின் பிடியைத் தளர்த்திக் கொள்ள அந்தந் தூண் அவளுக்கு உதவி செய்தது.

அவள், வீட்டைச் சுற்று முற்றும் நோக்கினாள். அவள் நோக்கில் காதல் கனத்தது. அவ்வீட்டில் இருக்கும் தன் காதலனைக் கண்டுவிட வேண்டும் என்ற எழுச்சியில் அவள் பார்வை பறந்தது. அந்த மூதாட்டியைப் பார்த்துக் கேட்டாள்:

"தாயே! உன் மகன் எங்கே இருக்கிறான்? நீண்ட நாட்களாக இங்கே காணவில்லையே!"

தாய் மெல்லக் கூறினாள்: "பெண்ணே! இவ்வூரிலுள்ளார் அனைவரும் உன் மகன் எங்கே? எங்கே? என்றே கேட்கிறார்கள். என் மகன் எங்கே இருப்பானோ, எனக்குத் தெரியாது. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். என் வயிறு பூனையைப் பெற்றுப் போட்ட புழுதிப் புலம் அன்று. புலியை ஈன்ற கற்குகை, கற்குகை இங்கே

இருக்கிறது. புலி எங்கே? போர்க்களம் அன்றோ, அதற்கு இடம்?"

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னேவென வினவுதி என்மகன்
யாண்டுள னாயினும் அறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

(புறம். 86.)

வறுமொழியாளரொடும், வம்பப் பரத்தரொடும் தன் மகன் திரிகின்றான் என்பதைக் கேள்வியுற்றால் தாயின் நிலை என்ன? அவள் புழுவெனவே துடித்திடுவாள். தாய் தன்னளவில் தீய நடத்தை யுடையவளாயினும் தன் மகன் நல்லோர் கூட்டத்தின் நடுவே இருக்க வேண்டுமென்றே விரும்புவாள். ஆனால் இப் புறப்பாடலில் வரும் தாயோ, 'என் மகன் எங்கே இருந்தாலும் எனக்குக் கவலையில்லை' என்று சொல்வதைப் பார்க்கின்றோம்.

'என் மகன் யாண்டுள னாயினும் அறியேன்' என்ற கூற்றிலே பொருட்செறிவு உண்டு.

ஒவ்வொரு மகனும் தன் தாய்க்கு இத்தகைய கவலை இன்மையைத் தந்துவிட்டால் நாட்டில் இன்பம் தழைத்து வரும்.

அத்தாய், தான் கவலையின்றி இருப்பதற்குரிய காரணத்தையும் பின்னால் விளக்குகின்றாள். தன் மகன் போர்க்களத்திலே இருப்பதனாலே அவளுக்குக் கவலை இல்லையாம். போர்க்களம் அவன் இருக்கும் இடம் என்றவள், இருப்பான் என்று சொல்லாமல், 'தோன்றுவன்' என்று குறிக்கின்றாள். போர்க்களத்திலே அவனைத் தேடித் திரிய வேண்டுவது இல்லை. போருக் கஞ்சிப் பின்னணியில் பதுங்கிச் செல்லும் கோழையல்லன் அவன். மாற்றார் வெள்ளத்தைத் தனியொருவனாய்த் தடுத்து நிறுத்தும் கல்லணை போன்றவன். போர்க்களத்திலே எந்த இடத்திலிருந்து நோக்கினாலும் விளக்கமாகத் தோன்றி நிற்பான் என்பதையே அவள் 'தோன்றுவன்' என்ற ஒரே சொல்லால் குறிப்பிடுகின்றாள்.

நாட்டைக் காக்கும் சமுதாயப் பணியிலே ஈடுபட்டிருக்கும் தன் மகனைக் குறித்துத் தாயொருத்தி கவலை கொள்ள என்ன இருக்கிறது? "எங்கே யிருந்தாலும் சமுதாயத்துக்கு நன்மை யாற்றும் பணியிலே ஈடுபட்டிருப்பான்" என்று மகனைப்பற்றிக் கவலை கொள்ளாமல் வாழும் வாழ்க்கையைத் தன் தாய்க்கு அளிப்பவனே தாய்மைக்கு முழுமை தருபவன் ஆவான்.

காலமெல்லாம் கருதுக!

[கவிஞர் கூத்துசிவன், வாணியம்பாடி]

கற்றறிந்த சான்றோர்கள் கூறு கின்ற
கண்ணுன நெறிபற்றி வாழக் கற்ருல்
மற்றிங்கே துன்பமென ஒன்று மில்லை;
மண்ணகத்தே சொர்க்கத்தைக் காண லாகும்!
பற்றுவைத்துப் பெரும்பொருளைச் சேர்க்க எண்ணிப்
பாமரரை ஏய்ப்பதனுல் பணந்தான் மிஞ்சும்;
முற்றுமவர் வாழ்நாட்கள் முடியுமட்டும்
முறையான இன்பந்தான் முளைத்தல் இல்லை! (1)

நன்மையிது தீமையிது எனப்பி ரித்தே
நலங்கொண்டு வாழ்கின்ற வகைய றிந்தால்
புன்மையெலாம் போயொழியும்; பொய்ம்மை அஞ்சும்;
பூமியிது பேரின்பப் பூங்கா வாகும்!
கன்மனத்தர் கருணையொடு வாழக் கற்ருல்
காசினியில் வறுமையிலை; களிப்பே மிஞ்சும்!
தன்னலத்தை மறந்துபொதுத் தொண்டு செய்தால்
தரமான தலைவனெனத் தரணி போற்றும்! (2)

பயனேதும் இல்லாத பழமை தன்னைப்
பாழென்று வெறுத்திடவும் பழக வேண்டும்!
பயமேதும் கொள்ளாமல் பகுத்த றிந்து
பண்போடு வாழ்தற்குப் பற்று வேண்டும்!
நயமாகப் பகைநீக்கி உறவு கொண்டு
நலமெல்லாம் விளைக்கின்ற ஞானம் வேண்டும்!
சுயமாகச் சிந்தித்துச் சொல்ல வல்ல
சோர்வற்ற நல்லறிவே நமக்கு வேண்டும்! (3)

நாடுமொழி இனப்பற்றும் இருக்க வேண்டும்!
நாணுகின்ற செயல்செய்ய நாண வேண்டும்!
வாடுகின்ற ஏழையரின் வாட்டந் தீர்க்க
வகையான திட்டங்கள் வகுக்க வேண்டும்!
ஓடுகின்ற பேராற்றுப் பெருக்கைப் போல
உழைப்போரை மதிக்கின்ற மனமும் வேண்டும்;
கேடொன்றும் நமையணுகக் கூடா தென்ருல்
காலமெல்லாம் இதுபோலக் கருத வேண்டும்! (4)

கம்பன் மிகக் குறைவாகக் கையாண்டுள்ள கலிவிருத்த வகைகள்

[ம. ரா. பூபதி, எம். ஏ.]

(தமிழ்த்துறைத் தலைவர். தாகூர் கலைக் கல்லூரி, புதுச்சேரி – 8)

கம்பன் தனது இராமாயணத்தில் 24 வகைக் கலி விருத்தங்களைக் கையாண்டுள்ளான். இக்கலி விருத்தங்களில் 10-க்கும் குறைவான பாடல்களைப் பாடுவதற்கு 3 வகைக் கலிவிருத்தங்களைப் பயன்படுத்துகின்றான். அம்மூவகைக் கலிவிருத்தங்களின் வாய்பாடுகள் வருமாறு:

(1) கூவிளம் தேமா கூவிளம் தேமா
(2) கூவிளம் புளிமா கூவிளம் புளிமா
(3) கூவிளம் கூவிளம் கருவிளங்காய் கூவிளம்

கம்பன் பயன்படுத்தும் 24 வகைக் கலிவிருத்தங்களில் 17 வகைகள் அவனுக்கு முற்பட்ட காலத்திலேயே தமிழ் இலக்கியங்களில் கையாளப்பட்டு விட்டவை. ஏனைய 7 வகைக் கலிவிருத்தங்களைக் கம்பனே முதல் முதலாகத் தனது இராமாயணத்தில் அறிமுகப்படுத்தியுள்ளான். அந்த 7 வகைக் கலி விருத்தங்களில் மேலே கூறிய 3 வகைக் கலிவிருத்தங்களும் அடங்கும்.

(1) கூவிளம் தேமா கூவிளம் தேமா
(2) கூவிளம் புளிமா கூவிளம் புளிமா

இவ் வாய்பாட்டுக் கலிவிருத்தங்களை முதல் முதலாகக் கம்பனே பயன்படுத்தியுள்ளான் என்றாலும், இவ்வாய்பாடுகளைக் காண அவனுக்குத் தூண்டுகோலாக, வழிகாட்டியாக இருந்தது திருஞான சம்பந்தர் தேவாரத்தில் உள்ள 127-ஆம் பதிகமாகிய திருப்பிரமபுரப் பதிகத்தில் காணப்படும் 7-ஆம் பாட்டே என அறிகிறோம். வியாழக் குறிஞ்சிப் பண்ணில் ஏக பாதமாக உடைய அப்பாட்டு வருமாறு:

"செருக்குவாய்ப் புடையான் சிரபுரம் என்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுரம் என்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுரம் என்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுரம் என்னில்"

இப்பாட்டின் வாய்பாடு, "கருவிளம் புளிமா கருவிளம் தேமா" என்பது.

இவ்வாறு முதற்சீர், 3-ஆம் சீர்களை விளச்சீராகவும், 2, 4-ஆம் சீர்களை மாச்சீர்களாகவும் அமைத்துக் கலிவிருத்தத்தை உருவாக்கலாம் என்பதற்கு முதல்முதலாக வழிகாட்டியது திருஞான சம்பந்தரது தேவாரமே. இவ்வகைக் கலிவிருத்தத்தில் மேலே காட்டிய ஒரே ஒரு பாட்டுதான் திருஞான சம்பந்தர் தேவாரத்தில் உள்ளது.

அடுத்து, இவ்வாறு கலிவிருத்தத்தில் முதற்சீர், 3-ஆம் சீர்களை விளச்சீராகவும், 2, 4-ஆம் சீர்களை மாச்சீர்களாகவும் அமைத்துப் பாடிய பெருமை திவ்விய பிரபந்த ஆசிரியர்களில் நம்மாழ்வாருக்கே உண்டு.

"ஒருவிளம் ஒருமா ஒருவிளம் ஒருமா"

என்ற வாய்பாட்டில் நம்மாழ்வார் திருவாய்மொழியில் 2-ஆம் பத்தின் 10-ஆம் திருவாய்மொழியாகிய 'கிளர்ஒளி' என்பது 11 பாசுரங்களால் திருமாலிருஞ் சோலைமலையைப் பாடுகின்றது. எடுத்துக் காட்டுக்கு ஒரு பாட்டு.

"கிளர்ஒளி இளமை கெடுவதன் முன்னம்
வளர்ஒளி மாயோன் மருவிய கோயில்
வளர்இளம் பொழில்சூழ் மாலிருஞ் சோலை
தளர்விலர் ஆகில் சார்வது சதிரே"

இத் திருவாய்மொழிக்கு 'பண் - நாட்டம், தாளம்-ஏழொத்து; கேதாரகௌள ராகம் - ஆதிதாளம்' என்று இசை வகுக்கப் பட்டுள்ளது.

நம்மாழ்வாரே, திருவாய்மொழி 9-ஆம் பத்தில் 3-ஆம் திருவாய்மொழியில், 3-ஆம் பாசுரத்தை இவ்வாய்பாட்டில் அமைத்துள்ளார். அப்பாசுரம் வருமாறு :

"அறிந்தன வேத அரும்பொருள் நூல்கள்
அறிந்தன கொள்க அரும்பொரு ளாதல்,
அறிந்தனர் எல்லாம் அரியை வணங்கி
அறிந்தனர் நோய்கள் அறுக்கும் மருந்தே"

இப்பாசுரம் அமைந்த திருவாய்மொழிக்கு, "பண் - நட்ட பாடை; தாளம் - ஏழொத்து; கேதார ராகம் - ஆதிதாளம்" என்று இசை வகுக்கப்பட்டுள்ளது. இப்பன்னிரண்டு பாசுரங்களைத் தவிர "ஒருவிளம் ஒருமா, ஒருவிளம் ஒருமா" என்ற வாய்பாட்டில் வேறு கலிவிருத்தம் எதுவும் நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் காணப்படவில்லை.

திருநாவுக்கரசர், சுந்தரர், நம்மாழ்வாரைத் தவிர ஏனைய ஆழ்வார்கள், மாணிக்கவாசகர், தோலாமொழித் தேவர், திருத்

தக்க தேவர், சேக்கிழார் ஆகியோருள் எவரும் இவ்வகைக் கலி விருத்தத்தைப் பாடவே இல்லை.

கம்பன், திருஞான சம்பந்தர் பாடிய "கருவிளம் புளிமா கருவிளம் தேமா" என்ற வாய்பாட்டையும், நம்மாழ்வார் பயன்படுத்திய "ஒருவிளம் ஒருமா ஒருவிளம் ஒருமா" என்ற வாய்பாட்டையும் அவ்வாறே பயன்படுத்தாமல், அவ்வாய் பாடுகளை இன்னும் சிறிது நுட்பமாக்கி, அமைத்துக் கொண்டு பாடியுள்ளான். 'ஒருவிளம்' என்பதற்கு மாருகக் 'கூவிளத்' தையும் 'ஒருமா' என்பதற்கு மாருகத் 'தேமா' அல்லது 'புளிமா' வை மட்டும் அமைத்து,

"கூவிளம் தேமா கூவிளம் தேமா
கூவிளம் புளிமா கூவிளம் புளிமா"

என்ற வாய்பாடுகளை உருவாக்கிப் பாடினுன். ஒரு வாய்பாட்டுக் கலிவிருத்தத்திலிருந்து வேறு வாய்பாட்டுக் கலிவிருத்தங்கள் எவ்வாறு இணைந்து வளர்கின்றன என்பதற்கு இது சிறந்த எடுத்துக் காட்டாகும்.

(1) கூவிளம் தேமா கூவிளம் தேமா

இவ் வாய்பாட்டுக் கலிவிருத்தத்தில் கம்பன் நான்கே பாடல்கள் பாடியுள்ளான். அவை யுத்த காண்டத்தில், மாயா சீதைப் படலத்தில் 20 முதல் 23 வரையுள்ள பாடல்கள் ஆகும். மேலே காட்டிய சம்பந்தர் பாவும், நம்மாழ்வார் பாசுரங்களும் இறைவன் பெருமை இயம்பல், அறிவுரை கூறல் ஆகிய பொருள்களைப் பற்றியவை. ஆனுல், இவ்வகைக் கலிவிருத்த ஓசையில் விறுவிறுப்புத் தன்மை இயல்பாக அமைந்திருப்பதைக் கண்டு, விரைவு மிக்க நிகழ்ச்சிகளைப் பாட இதனைப் பயன்படுத்திய பெருமை கம்பனுக்கே உண்டு.

யுத்த காண்டத்தில், மாயா சீதைப் படலத்தில், இலங்கையைச் சுடுவதற்கு இராமனது இசைவு பெற்றுச் சுக்கிரீவனுடன் புறப்பட்ட வானரப் படைகள், இலங்கை மதில் வாயிலில் சென்று எண்ணற்ற எரி கொள்ளிகளை வீசி இலங்கையைத் தீக்கு இரையாக்குகின்றன. விறுவிறுப்பும் விரைவும் மிக்க இந்நிகழ்ச்சியைக் கம்பன் இவ்வாய்பாட்டுக் கலிவிருத்தத்தில் பாடுகிருன்.

"எண் இல கோடிப் பல்படை யாவும்
மண்ணுறு காவல் திண்மதில் வாயில்
வெண்ணிற மேகம் மின்இனம் வீசி
நண்ணின போல்வ தொல்நகர் நாண"

"ஆசைகள் தோறும் அள்ளின கொள்ளி
மாசறு தானை மர்க்கட வெள்ளம்
நாசம் இவ்வூருக் குண்டென நாவின்
வீசின வானின் மீன்விழும் என்ன"

"வஞ்சின மன்னன் வாழும் இலங்கை
குஞ்சரம் அன்னர் வீசிய கொள்ளி
அஞ்சன வண்ணன் ஆழியில் ஏவும்
செஞ்சரம் என்னச் சென்றன மென்மேல்"

"கையகல் இஞ்சிக் காவல் கலங்கச்
செய்யகொ ழுந்தி சென்று நெருங்க
ஐயனெ டுங்கார் ஆழியை அம்பால்
எய்யவெ ரிந்தால் ஒத்தது லங்கை."

(2) கூவிளம் புளிமா கூவிளம் புளிமா

இவ்வாய்பாட்டுக் கலிவிருத்தத்தில் கம்பன் ஒரே ஒரு பாட்டைத்தான் இராமாயணத்தில் பாடியுள்ளான். வேறொரு வகைக் கலிவிருத்தத்தில் 2230 பாடல்களைப் பாடியுள்ள கம்பன், இவ்வகைக் கலிவிருத்தத்தில் ஒரே ஒரு பாட்டுப்பாடி இருப்பது வியத்தற்குரியதாக உள்ளது. அயோத்தியா காண்டத்தில், கைகேயி சூழ்வினைப் படலத்தில், 68-ஆம் பாட்டாக அப்பாட்டு அமைந்துள்ளது. இப்பாட்டும் ஒரு பரபரப்பான நிகழ்ச்சியைக் குறிக்கவே வந்துள்ளது.

கைகேயி தயரதனிடம் இரு வரங்களைப் பெற்றுக்கொண்டதை அறியாத நகர மகளிர் இராமனுடைய முடிசூட்டு விழாவுக்காகத் தங்களை விரைவாக அணி செய்து கொள்கின்றனர். அந்நிகழ்ச்சியைப் புலப்படுத்தக் கம்பன் இவ்வாய்பாட்டுக் கலிவிருத்தத்தில் ஒரு பாட்டுப் பாடியுள்ளான். அது வருமாறு:

"குஞ்சரம் அனையார் சிந்தைகொள் இளையார்
பஞ்சினை அணிவார்: பால்வளை தெரிவார்;
அஞ்சனம் எனவாள் அம்புகள் இடையே
நஞ்சினை இடுவார் நாள்மலர் புனைவார்"

(3) கூவிளம் கூவிளம் கருவிளங்காய் கூவிளம்

இவ் வாய்பாட்டுக் கலிவிருத்தத்தைக் கம்பனுக்கு முன்னால் எவரும் கையாளவில்லை. எனவே, இதனை முதல் முதலாக அமைத்துப் பாடிய பெருமை முழுதும் கம்பனுக்கே உண்டு. எனினும், இவ்வாய்பாட்டுக் கலிவிருத்தத்தை அவ்வளவு செம்மையாகக் கம்பன் அமைக்கவில்லை என்றே கூறவேண்டியுள்ளது.

கிட்கிந்தா காண்டத்தில், பம்பைப் படலத்தில் இரண்டு (37, 38) பாட்டுக்களைக் கம்பன் இவ்வகைக் கலிவிருத்தத்தில் அமைத்துள்ளான்.

சீதையை இழந்து துயருள் மூழ்கி இருந்த இராமனை மாலைக் கடனைச் செய்யுமாறு இலக்குவன் வேண்ட, இராமன் நீராடிக் கடன் முடித்து ஒரு சோலையில் தங்கும் சோக நிகழ்ச்சியை விளக்கக் கம்பன் இவ்வகைக் கலிவிருத்தத்தைப் பயன்படுத்தி யுள்ளான்.

"ஆடினன் அன்னமாய் அருமறைகள் பாடினன்
நீடுநீர் ; முன்னைநூல் நெறிமுறையின் நேமிதான்
சூடினன் ; முனிவர்தம் தொகுதிசேர் சோலைவாய்
மாடுதான் வைகினன் ; எரிகதிரும் வைகினன்."

"அந்தியாள் வந்துதான் அணுகவே அவ்வயின்
சந்தவார் கொங்கையாள் தனிமைதான் நாயகன்
சிந்தியா, நொந்துதேய் பொழுதுநெறு சீதநீர்
இந்துவான் உந்துவான் எரிகதிரி னன்ன."

என்பவையே அப்பாக்கள். இவற்றுள் முன்னைய பாட்டில் 3-ஆம் அடியின் 3-ஆம் சீரும், பிந்திய பாட்டில், முதல் இரண்டு அடிகளின் 3-ஆம் சீர்களும் 'கருவிளங்காயாக' வருவதற்கு மாறாகக் 'கருவிள'மாக அமைந்து பாட்டின் ஓசை அமைதியைச் சிறிது வேறுபடுத்துவதைக் காணலாம்.

மாநகரத் தமிழாசிரியர் கழகம், சென்னை

அன்புள்ள தமிழாசிரியர் பெருமக்களுக்கு வணக்கம். தமிழின், தமிழரின் பொற்காலம் என்று பெருமைப் படத்தக்க கலைஞர் ஆட்சியில் ஒரு நாடகக் குழுவினர் தமிழாசிரியரை இழிவுபடுத்தும் செயல்புரிந்து வருவதை மனவருத்தத்துடன் தங்கட்கு அறிவிக்கின்றேன்.

என். எஸ். என். நாடகக் குழுவினர் நடத்தும் 'டெல்லி மாமியார்' என்னும் நாடகத்தில் ஒரு தமிழாசிரியர் பாத்திரம் நாடகம் பார்ப்போர் உள்ளத்தில் தமிழாசிரியரைப் பற்றிக் கீழான கருத்தும் கேவலமான எண்ணமும் ஏற்படுமாறு படைக்கப்பட்டுள்ளது. 4-12-'75 அன்று நடந்த மாநகரத் தமிழாசிரியர் கழகச் செயற்குழுவில் இது குறித்துக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்நாடகக் குழுவின் தலைவர் நடிகர் சுந்தரராசனிடம் கூறி அதை மாற்றுமாறு அறிவித்தோம். அவர் முரட்டுத்தனமாக மறுத்துவிட்டார். நகரக் காவல்துறை ஆணையரிடமும் முறையிட்டோம். இதுவரை ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. தமிழாசிரியரை இழிவுபடுத்தும் அந்நாடகம் தொடர்ந்து நடக்கிறது. இதுபற்றி முதல்வர் கலைஞரிடம் முறையிட எண்ணியுள்ளோம். தமிழாசிரியப் பெருமக்கள் இது குறித்து உடனே மாநிலத் தமிழாசிரியர் கழகம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி எழுதுமாறு வேண்டுகிறேன்.

23—12—'75 மா. கி. தசரதன்

இனிமை மொழி வேண்டும்!

[வங்கனூர் அ. மோகனன்]

(அரசினர் உயர்நிலைப் பள்ளி, திருத்தணி, செங்கை மாவட்டம்)

இனிமை மொழிவேண்டும்!—நெஞ்சில்
ஈகைக் குணம்வேண்டும்!
கனிபோல் சுவைநல்கும்—உயர்
கருணை மனம்வேண்டும்!

தன்னலக் காரனிடம்—இன்பம்
தாவி மகிழ்வதில்லை!
அன்பின் நிழல்கூட—அவன்
அருகில் விழுவதில்லை!

நன்றி எதிர்பார்த்து—மழை
நமக்குப் பொழிகிறதா!
என்றும் மனிதருக்காய்—மண்ணில்
எழிலைப் படைக்கிறதே!

ஏழையர் புன்னகையே—உன்னை
ஏற்றிப் புகழ்பாடும்!
வாழும் நெறிமுறையில்—நீ
வாழ்ந்தால் நலம்கூடும்!

மன்றக் கட்டடத் திறப்பு விழா மலர்

அண்மையில் நடைபெற இருக்கும் மன்றக் கட்டடத் திறப்பு விழா, மன்றத் தந்தையார் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் சிலை திறப்பு விழா ஆகியவற்றின் நினைவாக அழகிய மலர் ஒன்று வெளிவர இருக்கின்றது. அம்மலரில் வெளியிட ஆராய்ச்சிக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள் போன்ற கட்டுரைகளும், கவிதைகளும், வாழ்த்துச் செய்திகளும் அனுப்ப விரும்புவோர் அருள்கூர்ந்து 5—1—'76-க்குள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். கட்டுரை மலரில் நான்கு பக்கங்களுக்கு மிகாமலும், கவிதை ஒரு பக்கத்திலும் அமையுமாறு எழுதி அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரை, கவிதை அனுப்புவோர் தங்கள் மார்பளவு உருவப் படம் ஒன்றும் உடன் அனுப்பி வைத்தால் நலமாக இருக்கும்.

—மாணவர் மன்றத்தினர்.

காலத்தை வென்ற கவிதைத் தென்றல்!

புலவர் முத்து வெங்கடேசன், திருமயம்

[10-5-'75-ல் திருச்சி வானொலியில் 'கவிச்சோல் கேளீர்' நிகழ்ச்சியில் ஒலிபரப்பான கவிதை.]

சந்தனச் சோலையில்
செந்தமிழ்க் கொண்டலாய்ச்
சிந்து மழைபொழிந்த வேந்தன்—என்
சிந்தை தனைக்கவர்ந்த காந்தன்.

காடு கமழ்கின்ற
கற்பூரச் சொற்களில்
பாடும் கவியளித்த பண்ணன்—மனம்
நாடும் வழியுரைத்த திண்ணன்.

நாடும் மொழிகளில்
நாட்டம் பெருகிடப்
பாட்டு மணங்கொணர்ந்த தென்றல்!—பண்
பாட்டை நமக்களித்த மன்றம்!

தொன்னை மனத்தினை
தென்னை மனமென
மாற்றும் கவியுரைத்த சிங்கம்—கவி
மாற்றுக் குறையாத தங்கம்!

புரட்டுகள் நீங்கிடப்
புதுமைகள் ஓங்கிடப்
புரட்சிக் குரல்கொடுத்த அரிமா!—அந்தப்
புதுமை தமிழ்நிலத்தில் வருமா!

மானம் நிலைத்திட
மண்ணும் தழைத்திட
கானம் இசைத்தபூங் குயிலாம்!—அவன்
காலத்தை வென்றநல் உயிலாம்!

யாரவன்? யாரவன்?
பாரதி தாசனும்
பாட்டு நிலாவரங்கம் அன்றோ!—அவன்
காட்டும் ஒளிக்கிணைதான் உண்டோ!

புலமையும் சூழ்நிலையும்

(முத்து மா. சு.)

கவித்துவம் சூழ்நிலையை உருவாக்குகின்றதா? சூழ்நிலைக் கவித்துவத்தை உருவாக்குகின்றதா?

முதலில் கவித்துவம் சூழ்நிலையை உருவாக்கிப் பின்பு அச் சூழ்நிலைக்குத் தம்மையே அளித்து விடுகிறது. விடையிதுவே

அன்று தோன்றி மறைந்த கவிஞர் முதல், இன்று வாழும் கவிஞர் வரையிலும் இதன் அடிப்படையில்தான் வாழ்ந்தனர்! வாழ்கின்றனர்!

எந்த ஒரு கவிஞனும் முதலில் தம் கவித்துவத்தால் நல்ல ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்றுதான் விரும்புவான்; அதன்படியே செயற்படுவான். பின்பு அவனைச் சூழ்நிலை மாற்றிவிடுகின்றது. அது அவன் குற்றமன்று, ஏன் எனில், மாறித்தான் ஆகவேண்டும். மாறாமல் இருந்தால் அவனும் அழிவான்! அவன் கவித்துவமும் அழியும்!

சுயவலிமையை நம்பி வாழ்தல் அரிது. "தன் கையே தனக்கு உதவி" என்பது செவிக்கினிமை தரும் சொல். ஆனால், பின்பற்றல் இயலாது.

பண்டையாட்சி முறை தொட்டு, இன்றையாட்சி முறை வரையிலும் புலவர் பெருமக்கட்கென ஒரு தனிச் சிறப்பு வளர்ந்து வந்திருத்தல் காணலாம்.

"பண்புடையார் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்."

நாடாளும் உரிமை யடைந்தோன் பண்புடையார் வழி நின்று ஆளவேண்டும் என்பதே இதன் உட்கருத்து.

பண்புடையார் யாவர்? புலவர் பெருமக்களே. "பெருமை, சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்தொழுகுதல்" பண்பாகும்.

புலவர் பாடும் புகழுடை யரசுதான் நிலைத்திருக்கும்! நல்லரசு அமைவதற்குப் புலவர்கள் வழி வகுக்கின்றனர். அவ்வாறு அமைந்த பின் அதன் வழித் தாமும் செல்கின்றனர்; அல்லது ஒன்றி விடுகின்றனர். ஆள்பவனும், கவிஞனும் இணைவது அரிது, இணைந்தால் பிரிப்பது அரிது.

தான் புகழ் விரும்பா, வான் புகழ் வள்ளுவன் தன் குறளே இதற்குச் சான்று.

நீதி கூறத் தொடங்கினால் முடிவேயில்லை. மூவகையாற்றல், ஐவகைத் தொழில், எண் குணம், என்பதுபோல நீதி இத்துணை

எனக் கூற இயலாது. வளரவளர வயது கூடுமாறுபோலப் படப்பட நீதி தோன்றும்.

ஒருவர் கூறும் நீதியைப் பிறர் மறுப்பது எளிது. நீதி கூறுதல் என்பது எளிதன்று. புகழ்பவரும் இகழ்பவரும் கூறிய நீதியை ஏற்பவரும், முறையன்று என மறுப்பவரும் காணலாம்.

எனவே, படாத பாடுபட்டுத் தாமே சூழ்நிலையை உருவாக்கிக் கூறிய நீதிகளையும், சூழ்நிலைக்குத் தம்மை விளைவித்துக் கூறிய நீதிகளையும், வள்ளுவர் தம் குறளில் காணலாம். இவையிரண்டிலும் வலிமையுடையோரைக் காணுதல் அரிது.

வள்ளுவன் வகுத்த சூழ்நிலை :

"ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை."

எனச் செங்கோன்மை அதிகாரத்தில், அரசர்கள் இத்தகைய சூழ்நிலையை உருவாக்கிக் கொளல் நன்று என வரையறுத்துக் கூறும் வள்ளுவர்,

"கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை."

எனக் கண்ணோட்டம் எனும் அதிகாரத்தில் சூழ்நிலைக்கு அடி பணிந்து தம் பெருமையினை நிலை நாட்டுகிறார்.

சூழ்நிலைக்கு அடிபணிதல் வேறு, மாறுபடக் கூறல் வேறு, இவற்றை நான் கூறுகையில், 'வள்ளுவன் குறளில் குற்றமா?' எனக் கேட்கத் தோன்றும். கூறுவது குற்றமன்று, சூழ்நிலை.

செங்கோன்மை எனும் அதிகாரத்திற்கும், கண்ணோட்டம் எனும் அதிகாரத்திற்கும் இடைவெளி குறுகியதே யாயினும் வள்ளுவன் அவற்றைப் பாடி முடிக்க எடுத்துக் கொண்ட காலம் நீண்டதே. அந்நீண்ட கால இடைவெளிதான் நான் கூறும் சூழ்நிலை.

அரசனால் செய்யப்படும் முறையினது தன்மை செங்கோன்மையாகும். இம்முறை ஒருபாற் கோடாது செவ்விய கோல் போறலிற் செங்கோன்மை எனப்பட்டது. இஃது இவ்வதிகாரத்தின் விளக்கம்.

தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்க மாட்டாமை. இது கண்ணோட்டத்தின் விளக்கம்.

முன்னது அரசனுக்கு வள்ளுவர் இடும் கட்டளை. காலம் மாற, மாற எந்த ஒரு அரசனும் கடைப்பிடிக்க இயலாத ஒரு கட்டளையாக எங்கே மறைந்து விடுமோ என்று அவரே சிறிது

தளர்த்தி விடுகிறார். அத் தளர்வுதான் பிந்தியது. இப்படித் தன் கட்டளைப்படி நடப்பது சாலச் சிறந்தது என்றும், சிறிது வழுவி நடப்பது முழுதும் குறைபாடுடையது அன்று என்றும் கூறாமல் கூறுகிறார்.

அறங் கூறவந்த வள்ளுவர் இவ்வாறு பலவிடங்களில் இரு வழிகளில் கூறியிருத்தலைக் காணலாம். 1. அவரே கூறும் அறம். 2. பிறருக்காகக் கூறப்பட்ட அறம், அல்லது 1. வள்ளுவர் அறம் கூறினார். 2. அறம் வள்ளுவரால் கூறப் பட்டது எனலாம்.

"கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்." இது செங்கோன்மை.

"பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்." இது கண்ணோட்டம்.

முன்னது குடிகள் தம்முள் நிகழ்வன. பின்னது தம்மாட்டு நிகழ்வன எனக் கூறுகிறார் பரிமேலழகர். இரண்டிலும் "நஞ்சிடுதல்" உண்டு.

ஒருவன் கேட்கிறான் : 'குடிமக்களுள் ஒருவன், ஒருவனுக்கு நஞ்சிட்டால் அரசன் ஒறுத்தல் முறை எனக் கூறிய வள்ளுவர், என்னதான் அரசனொடு நெருங்கிப் பழகியவராயினும், நஞ்சிடு கையில் அதனை அவன் உண்டு அமைதல் முறை என எதனை வைத்துக் கூறினார்?' என்று.

வையகம் காப்பவன் இறை! நீதிநெறி வழுவா மன்னர்கள் ஒரு நாட்டிற்கு அமைவது அரிது! அத்தகைய அருங்குணங் கள் வாய்ந்த அரசன் மக்களை மறந்து, நாட்டை மறந்து, தம் மொடு பயின்றார் எனும் ஒரே காரணத்திற்காக நஞ்சுண்டார் எனின் அஃது அவர் உண்ட நஞ்சு அன்று; நாட்டு மக்கள் உண்ட நஞ்சு. மக்கள் மனம் அறிந்து நடத்தல் மன்னன் கடமை! அவனுக்கென்று ஒரு மனம் கூடாது! எனவே அவன் தன்னிச்சையாக நடக்க அவனுக்கு உரிமை கிடையாது! என் பது அவன் வாதம்.

இப்படிப் பலரும் பலவாறு வாதம் செய்வதற்கு இடம் வள்ளுவரின் குறளில் பல உண்டு. எனினும் அவை உண் மையை உணராமையான் வருவனவே யன்றிப் பிறிதில்லை.

வள்ளுவரின் குறள் ஆழம் காணப் புகுவோர், மேல் நான் குறிப்பிட்ட இரண்டு நிலையினை நன்குணரல் வேண்டும்! கண் ணோட்டம் பல திறப்பட்டது.

கண்ணப்பன் சிவலிங்கத்தைக் கண்டது வெகுளியின்பாற் பட்ட கண்ணோட்டமாகும்.

மனுநீதி, குற்றம் புரிந்த தன் மகனைக் கண்டது பற்றற்ற நிலையின்பாற்பட்ட கண்ணோட்டமாகும்,

புருவின் துயர்கண்ட சிபியின் கண்ணோட்டம் பாகுபாடு அற்ற நிலையுடையது. இதையே நம் வள்ளுவரும்.

'கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை' என்றார்.

விளக்கம் புதிதாகத் தோன்றலாம். இது உங்கள் கண்ணோட்டம்.

அடுத்து நடுவு நிலைமைக்கும், கண்ணோட்டத்திற்கும் வள்ளுவர் வகுத்துள்ள இலக்கணம் முரண்பாடுடையது போலத் தோன்றினும் உண்மை யுணரும் ஆற்றல் உடையோர்க்கு அதன் நயம் புலப்படும்.

நடுவு நிலைமை நாடாள்வோனுக்கு இன்றியமையாததா? இல்வாழ்வோனுக்கு இன்றியமையாததா? இதுவே வள்ளுவர் வினா? விடை கூறல் அரிது எனவே விடையும் அவரே தருகிறார். எனவேதான் இல்லறவியலில் "நடுவு நிலைமை" வைத்தார். ஆள்வோனுக்கும் இது தேவை. எனவே அங்குச் "செங்கோன்மை" வைத்தார். அதே நேரத்தில் அவனுக்குக் "கண்ணோட்டம்" தேவை. இங்கு அது தேவையில்லை.

அறிவிலிகள் பலர் தமக்குத் தலைவனாக அறிவிற் சிறந்தவனையே விரும்புவர்! அறிவுடையோர் பலர் தமக்குத் தலைவனாக அறிவிலி ஒருவனையே விரும்புவர். அத்தகைய ஒரு தலைமையின் கீழ்த்தான் அவர்கள் அமைதியாகச் செயற்படுவர், இன்றேல் பூசல் விளையும். அஃதேபோல்,

தலைமைக்கு மென்மையாக இலக்கணம் வகுத்த வள்ளுவர், குடிகட்கு வன்மையாக இலக்கணம் வகுக்கிறார் ஏன்? தலைமையின் மாற்றமும், நிலைத்தலும் குடிகளிடத்துள்ளது. என்பதால், அக்குடிகள் பண்புடையோராக, அன்புடையோராக, வாய்மையுடையோராக, நடுவுநிலைமை யுடையோராக இருத்தல் வேண்டும் என்பதற்காக.

இதனை நன்குணர்ந்த பரிமேலழகர் நடுநிலைமைக்கு விளக்கம் தருகையில்.

'பகை, நொதுமல், நண்பென்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை. இது நன்றி செய்

தார் மாட்டு அந்நன்றியினை நினைத்தவழிச் சிதையுமன்றே; அவ்விடத்தும் சிதையலாகாது' என்கிறார்.

இஃது இல்லறவியலில் வருவது. குடிகட்கு வள்ளுவர் இவ் விடத்தில் வன்மையாக இலக்கணம் வகுத்திருத்தல் அறியலாம்.

அடுத்து, செங்கோன்மை அதிகாரத்தினை மீண்டு நினைவு கூர்தல் நல்லது.

"அரசனாற் செய்யப்படும் முறையினது தன்மை, அம்முறை ஒருபாற் கோடாது செவ்வியகோல் போறலிற் செங்கோன்மை யெனப்பட்டது."

இதே விடத்தில் மீண்டும் கண்ணோட்டத்தின் விளக்கத் தையும் காண்போம்!

"தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை."

தன்னோடு பயின்றார் கூறியன மறுக்கமாட்டாமை என்ற விடத்து ஒரு பாற்கோடுதல் குற்றம் உண்டாகுமன்றோ? ஒரு பாற் கோடுதல் நேர்ந்துழி அஃது செங்கோன்மையினின்று வழுவிக் கொடுங்கோன்மையிற் சேருமன்றோ? இவ்வினாவிற்கு விடையும் வள்ளுவரே கூறியிருக்கிறார்.

"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு."

வள்ளுவர் இன்று இருந்தால் இக்குறளையே இவ்வதிகாரத் தின் முதற் குறளாக்கி யிருப்பார்.

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லாரைக் காண்டலரிது என்பதற்காக ஒருவேளை பின்னால் வைத்தாரோ!

மேற்கூறியவை நாடாள்வோனுக்கு வள்ளுவர் வகுத்துள்ள மென்மை இலக்கணம் ஆகும். அதே நேரத்தில் ஆழம் மிக்கதும் ஆகும். எனவேதான் ஓங்கிய சிறப்பின் உயர்புகழ் மாங்குடி மருதன்

'ஓதற் கெளிதா உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.'

என்று பாராட்டினார் போலும்!

வீரத் தமிழன்னை டாக்டர் தருமாம்பாள் சுழற்கேடயப் பேச்சுப் போட்டிகள்

கல்லூரி உயர் பள்ளிகட்கான டாக்டர் தருமாம்பாள் நினைவுச் சுழற்கேடயப் பேச்சுப் போட்டிகள் முறையே 25, 26—10—'75 ஆம் நாட்களில் 'மயிலை சிவமுத்து நிலைய'த்தில் சிறப்பாக நிகழ்ந்தேறின.

பாத்திரப் படைப்பில் சிறந்தவர் யார்?
இளங்கோ கண்ட கண்ணகியா?
கம்பர் கண்ட சீதையா?

என்னும் தலைப்பில் பன்னிரு கல்லூரிகளைச் சார்ந்த மாணவ மாணவியர் சுவைபடச் சொற்போரிட்டனர்.

மன்றத் தலைவர் கோ. வில்வபதி, மாநகராட்சி கல்வி அதிகாரி திருமதி மிராண்டா கஜேந்திரன், திரு. அனந்தராமன் ஆகிய மூவரும் நடுவர்களாக இருந்து தீர்ப்பு வழங்கினர். தாம்பரம் கிறித்தவக் கல்லூரிக்குச் சுழற்கேடயப் பரிசு கிடைத்தது. முதல் இரண்டு மூன்றும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

உயர் பள்ளிகட்கான பேச்சுப் போட்டியில் இருபத்து நான்கு பள்ளிகளைச் சார்ந்த மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். அடாது பெய்த மழையினையும் பொருட்படுத்தாமல் மாணவர்கள் விடாது ஆற்றிய சொற்போர் நல்ல சூடேற்றியது.

நாடு நலம் பெறுவது கைத்தொழிலாலா? ஆலைத்தொழிலாலா?

என்னும் பொருள் குறித்து ஒட்டியும் வெட்டியும் இனிய சொற்போர் நிகழ்ந்தது. பேராசிரியை திருமதி சரளா இராசகோபாலன், M.A., துணைப் பேராசிரியர் திரு. அ. மாணிக்கம், M.A., புலவர் பெ. அண்ணாமலை ரெட்டியார் ஆகியோர் நடுவர்களாக இருந்து சிறப்பித்தனர்.

கேடயப் பரிசு புரசை திருமதி முத்தையா செட்டியார் உயர் பள்ளிக்குக் கிடைத்தது. முதல் இரண்டு மூன்றும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இருவேறு நாட்களில் நடைபெற்ற பரிசளிப்பு விழாக்களுக்கும் மன்றத் தலைவர் புலவர் கோ. வில்வபதி அவர்கள் தலைமை ஏற்றார். செயலாளர்கள் கவிஞர் தணிகை உலகநாதர் அவர்களும், புலவர் மி. ச. நடேசன் அவர்களும் வரவேற்புரை ஆற்றினர். இணைச் செயலாளர் புலவர் ப. கி. பொன்னுசாமி அவர்கள் நன்றி கூறினர்.

தமிழ்நெறிக்காவலர் மயிலை சிவமுத்து

சுழற்கேடய வள்ளுவர், வள்ளலார் போட்டிகள்

நவம்பர் திங்கள் 8, 9 ஆம் நாட்களில் தமிழ்நெறிக்காவலர் மயிலை சிவமுத்து சுழற்கேடய வள்ளுவர், வள்ளலார் போட்டிகள் சிறப்பாக நிகழ்ந்தேறின. முன்னிலைப் போட்டிகள் 8—11—'75 ஆம் நாளன்று தாம்பரம் கிறித்து அரசர் உயர் பள்ளியிலும், மாம்பலம் தி. நகர் உயர் பள்ளியிலும் இனிது நடைபெற்றன. இறுதிநிலைப் போட்டிகள் மாணவர் மன்றம் மயிலை சிவமுத்து நிலையத்திலும், மன்றத்துக்குச் சொந்தமான சாரதா நடுநிலைப் பள்ளிக் கட்டடத்திலும் 9—11—'75 ஆம் நாளன்று நனி சிறந்த முறையில் நிகழ்ந்தேறின.

சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களைச் சார்ந்த முப்பது பள்ளிகளின் சுமார் ஆயிரம் மாணவ மாணவியர் இப்போட்டிகளில் கலந்து கொண்டனர். மன்றச் செயற்குழு—நிதிக்குழு—தேர்வுக்குழு உறுப்பினர்களாய் அமர்ந்து அரும்பணியாற்றி வரும் புலவர்கள், அறிஞர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் நடுவர்களாக இருந்து நல்ல தீர்ப்பு வழங்கினர்.

திருக்குறள் போட்டிகளில் மிகுதியான பரிசுகளைப் பெற்ற பிரம்பூர் இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி உயர்பள்ளிக்குச் சுழற்கேடயப் பரிசு வழங்கப்பட்டது. தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை மாணவர்கட்குத் தனித்தனியாகவும், வள்ளுவர் போட்டிக்கும் வள்ளலார் போட்டிக்கும் தனித்தனியாகவும் முதல் இரண்டு மூன்று நான்காம் பரிசுகள் போட்டி நிகழ்ந்த நாளன்றே வழங்கப்பட்டன.

பரிசளிப்பு விழா நிகழ்ச்சிக்கு மன்றத் தலைவர் புலவர் கோ. வில்வபதி அவர்கள் தலைமை ஏற்றார். மன்றச் செயலாளர் கவிஞர் தணிகை உலகநாதர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். இணைச் செயலாளர் புலவர் ப. கி. பொன்னுசாமி அவர்கள் நன்றி கூறினர்.

"குழந்தைகளுக்காகக் குழந்தைகளுடன் வாழ்வோம்"

அமரர் நேரு நினைவு நாளில்

ஆடல் பாடல் போட்டிகள்

வழக்கம்போல் இவ்யாண்டும் குழந்தைகளுக்கான ஆடல், பாடல், மாறுவேடப் போட்டிகள் 15, 16—11—'75 ஆகிய இரு நாட்களில் சிறப்பாக நிகழ்ந்தேறின. இப்போட்டிகளில் ஏறக் குறைய 3000 குழந்தைகள் கலந்து கொண்டனர்.

சென்னை மாணவர் மன்றம், மாம்பலம் மகரிஷி வாசுதேவ வித்யாலயம், அண்ணாநகர் வள்ளியம்மாள் பள்ளி, கோடம் பாக்கம் சரசுவதி வித்யாலயா, விழுதமங்கலம் இராசேசுவரி பாடசாலை, டாக்டர் இராசமாணிக்கனார் பள்ளி, குரோம் பேட்டை ஜானு நர்சரி பள்ளி, ராஜ கீழ்ப்பாக்கம் அண்ணா நர்சரி பள்ளி ஆகிய பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பள்ளிகளைத் தேர்விடமாகக் கொண்டு பாப்பாப் போட்டிகள் இனிது நடை பெற்றன.

மன்றச் செயற்குழு உறுப்பினர்கள், தேர்வுக்குழு உறுப் பினர்கள், நிதிக்குழு உறுப்பினர்கள் நடுவர்களாக இருந்து சிறப்பித்தனர். போட்டியில் கலந்துகொண்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன. போட்டிகள் முடிவடைந்தவுடன் அந்தந்தத் தேர்விடங்களி லேயே பரிசுகள் வழங்கப்பட்டன. மழலைச் செல்வங்களை ஊக்குவிக்கும் முகத்தான் நூற்றுக்கணக்கான பரிசுகள் தமிழ் நூல்களாகவும் வெண் பொற்காசுகளாகவும் வழங்கப்பட்டன.

நன்றி

சுழற்கேடயப் பேச்சுப் போட்டிகளிலும், வள்ளுவர் வள்ள லார் போட்டிகளிலும், பாப்பாப் போட்டிகளிலும் மிகுதியான மாணவர்களைக் கலந்துகொள்ளத் தூண்டித் துணைபுரிந்தமை யோடு அவர்களைப் பயிற்றுவித்தும் அரும்பணி ஆற்றிய ஆசிரியப் பெருமக்களுக்கும் பல்வேறு அலுவல்களுக்கிடையே எங்கள் வேண்டுகோளை ஏற்று நடுவர்களாக இருந்து உதவிய அன்பர்கள் அறிஞர்கள் அனைவர்க்கும் எங்கள் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.



சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை
பள்ளி மாணவர் பல்வகை நூல்கள்

பேழை அறிமுக விழா

சென்ற 3—12—'75ல் கழகம் உருவாக்கியுள்ள 'பள்ளி மாணவர் பல்வகை நூல்கள்' அடங்கிய பேழை அறிமுக விழா இலிங்கிச் செட்டித் தெரு, வள்ளலார் திருவருள் மண்டபத்தில் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் தமது வரவேற்புரையில் தமிழ் இலக்கிய உலகில் கழகம் ஆற்றிவரும் அரும்பெரும் பணிகளை எடுத்துக் கூறினர். குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் பேழையை அறிமுகப்படுத்தி, சைவசித்தாந்தக் கழகம் காலத்திற்கேற்றபடி புத்தம் புதிய கலை நூல்களை வெளியிட்டுவரும் பணியினை வியந்து பாராட்டினர். மாணவர் மன்றச் செயலாளர் கவிஞர் தணிகை உலகநாதன் அவர்கள் தமிழுக்குத் தமிழர்களே பகையாக இருந்த கால முதல் கழகம் எதிர் நீச்சலில் வளர்ந்து இன்று இலக்கியப் பட்டறையாக விளங்குகின்றது எனக் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சர் அவர்கள் தமது பாராட்டுரையில் விழாக்களுக்காகப் பணத்தை வீணக்குவதைவிட ரூ. 700 செலவழித்துக் கழகத்தின் அறிவுச் செல்வமாகிய பேழையை வாங்கலாம் எனக் குறிப்பிட்டார்.

கழக ஆட்சியாளர் நன்றிகூற விழா இனிது நிறைவேறியது.

பதிவு எண் M. 7611 தொலைபேசி : 22715

மாணவர் மன்றம், சென்னை

தமிழ்த் தேர்வுகள்

அன்புடையீர்,

வணக்கம்.

மன்றத் தமிழ்த் தேர்வுகள் வழக்கம் போல் இவ்வாண்டு பின் குறிப்பிட்ட நாட்களில் நடைபெறும்.

பள்ளியிறுதி (S. S. L. C.) வகுப்புத் தேர்வு

7-2-76 சனிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 12-30 மணிவரை

தமிழ் முதல்தாள்—தொழிலியற் பிரிவு

பிற்பகல் 2 மணிமுதல் 4-30 மணிவரை

தமிழ் இரண்டாம் தாள்

விண்ணப்பமும் கட்டணமும் அனுப்ப வேண்டிய இறுதி நாள் பலர் வேண்டுகோளுக்கு இணங்க 10-1-'76 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தேர்வுக் கட்டணம்	ரூ. 2—75
தொழிலியற் பிரிவு	ரூ. 1—50

தேர்வுச் செலவுக்காக மொத்தத் தொகையில் 15% சத விகிதம் கழித்துக் கொள்ளலாம்.

எட்டாம் வகுப்புத் தமிழ்த் தேர்வு

6-3-'76 சனிக்கிழமை காலை 10 மணி முதல் 12 30 வரை

கட்டணம் கட்டவேண்டிய இறுதி நாள் 5-2-'76

தேர்வுக் கட்டணம்	ரூ. 1—50

தேர்வுச் செலவு 10 சதவிகிதம்

கல்லூரி வகுப்புத் தமிழ்த் தேர்வுகள்

14-2-'76 சனிக்கிழமை 16-2-'76 திங்கட்கிழமை

விண்ணப்பமும் கட்டணமும் அனுப்பவேண்டிய இறுதி நாள் 17-1-'76

திரு. P. K. கிருஷ்ணன் அவர்களால் சென்னை-600001, 14-A, குப்பையர் தெருவில் உள்ள முத்துக்குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, புலவர்கள் தணிகை உலகநாதன், மி. ச. நடேசன் ஆகிய இருவராலும் மாணவர் மன்றத்துக்காக (12, வேங்கட ஐயர் தெரு, சென்னை-600001) வெளியிடப்பட்டது.

ஆசிரியர் : புலவர் கோ. வில்வபதி